
இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

**போரினால் பாதிக்கப்பட்டிருக்கும் உக்ரைனுக்கு அமைதி தேவை என்றும், ஆயுதங்களுக்குச் செலவிடுவதில் அதிக கவனம் செலுத்துவதால் தேவைப்படும் நிலையிலிருக்கின்ற மற்றும் மிகவும் பலவீனமானவர்களுக்கான ஆதரவை இழக்கும் அபாயம் உள்ளது என்றும் எடுத்துரைத்தார் திருத்தந்தை 14-ஆம் லியோ.**

# உலக மக்களுக்கு அமைதி தேவை – திருத்தந்தை


உக்ரைன் Sumy நக்ரில் இரஷ்ய தாக்குதலின் விளைவு

போரினால் பாதிக்கப்பட்டிருக்கும் உக்ரைனுக்கு அமைதி தேவை என்றும், ஆயுதங்களுக்குச் செலவிடுவதில் அதிக கவனம் செலுத்துவதால் தேவைப்படும் நிலையிலிருக்கின்ற மற்றும் மிகவும் பலவீனமானவர்களுக்கான ஆதரவை இழக்கும் அபாயம் உள்ளது என்றும் எடுத்துரைத்தார் திருத்தந்தை 14-ஆம் லியோ.

ஐரோப்பிய ஒன்றிய ஆயர் பேரவைகளின் கூட்டமைப்பின் பிரதிநிதிகளைச் சந்தித்தபோது திருத்தந்தை 14-ஆம் லியோ அவர்கள் எடுத்துரைத்த கருத்துக்களை வத்திக்கான் செய்திகளிடத்தில் பகிர்ந்துள்ளனர் அக்கூட்டமைப்பின் ஆயர் பிரதிநிதிகள்.

உக்ரைனில் ஏற்பட்டுள்ள மோதலுக்கு அதிக கவனம் செலுத்தப்பட்டு, விரைவில் ஒரு நிலையான, நியாயமான அமைதியை அடைவது அவசியம் என்று எடுத்துரைக்கப்பட்டதாகவும் ஆயர்கள் கூறினர்.

மேலும் இடம்பெயர்வு, இளைஞர்களோடு உடன்நடத்தல், நம்பிக்கை பரிமாற்றம், செயற்கை நுண்ணறிவு ஆகியவை குறித்தக் கருத்துக்கள் பகிரப்பட்டதாக எடுத்துரைத்த ஐரோப்பிய ஆயர் கூட்டமைப்பின் பிரதிநிதிகள், கூட்டமைப்பின் ஆயர்கள்

ஒவ்வொருவரின் தனிப்பட்ட கருத்துக்களுக்குத் திருத்தந்தை அவர்கள் கவனமாக செவிசாய்த்ததாகவும் தெரிவித்தனர்.

உக்ரைன் நாட்டில் ஏற்பட்டு வரும் போர் மற்றும் மோதலினால் மக்களின் வாழ்க்கையில் ஏற்படும் பொருளாதார மற்றும் சமூக விளைவுகள் குறித்து திருத்தந்தை அவர்கள் அதிகமாக எடுத்துரைத்ததாகவும், தடுப்பு மற்றும் பாதுகாப்பு அமைப்புகளை வலுப்படுத்துவதற்காக கொடுக்கப்படும் அதிக நிதி என்பது துன்பப்படுபவர்கள் அல்லது சிரமத்தில் வாழ்பவர்களுக்கான உதவி என்று கூறியதாகவும் சுட்டிக்காட்டினர் ஆயர்கள்.



போர் நிறுத்தத்திற்கான உறுதியான தீர்வுகளைக் காணவில்லை என்றாலும், அனைத்து ஐரோப்பிய நாடுகளும் போரை விரைவில் நிறுத்தும் இலக்கில் ஈடுபட்டுள்ளதாக உணர வேண்டும் என்று திருத்தந்தை சுட்டிக்காட்டியதாக எடுத்துரைத்த ஆயர்கள், இடம்பெயரும் மக்களை வரவேற்றல், ஒருங்கிணைத்தல், சமநிலைப்படுத்துதல் ஆகியவை குறித்து கூட்டத்தில் பகிர்ந்துகொண்டதாகவும் தெரிவித்தனர்.

மெரினா ராஜ் - வத்திக்கான்

# குழந்தைகளுக்கான திருவிவிலியத்தின் சிறப்புப் பதிப்பை வெளியிடுகிறது




மே மாதம் 30 முதல் ஜூன் மாதம் 1 வரை உரோமையில் இடம்பெறவிருக்கும் குடும்பங்கள், குழந்தைகள், தாத்தா பாட்டி மற்றும் முதியோர்களின் யூபிலியின் ஒரு பகுதியாக, கடந்த 1979-ஆம் ஆண்டில் முதலில் வெளியிடப்பட்ட குழந்தைகளுக்கான திருவிவிலியத்தின் சிறப்புப் பதிப்பினை ACN எனப்படும் தேவையில் இருக்கும் திருஅவைக்கு உதவும் அமைப்பு மீண்டும் புதுப்பித்து வெளியிட இருப்பதாக செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது

மே 31, சனிக்கிழமையன்று, புனித ஜான் இலாத்தரன் பெருங்கோவிலில் இடம்பெறவிருக்கும் முக்கிய நிகழ்வில், குடும்ப விழா மற்றும் திருவிழிப்பு இறைவேண்டலின்போது அதன் பங்கேற்பாளர்களுக்கு இத்தாலி, ஆங்கிலம், ஸ்பானிஷ், பிரஞ்சு மற்றும் போர்த்துகீசியம் ஆகிய ஐந்து மொழிகளில் 10,000 திருவிவிலியப் பிரதிகளை விநியோகிக்கும் என்றும் அச்செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

45 ஆண்டுகளுக்குப் பிறகு, குழந்தைகளுக்கான திருவிவிலியத்தின் வடிவமைப்பைப் புதுப்பிக்க முடிவு செய்துள்ள இவ்வமைப்பு, வாசகர்களால் மிகவும் விரும்பப்படும் அம்சங்களில் ஒன்றான அசல் விளக்கப்படங்கள் அதில் கொடுக்கப்பட்டுள்ளன என்றும், இப்புதிய பதிப்பு இப்போது முழு பக்க வடிவத்தில் மிகவும் நவீனமான மற்றும் பார்வையை ஈர்க்கும் தளவமைப்போடு தோற்றமளிக்கிறது என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

குழந்தைகளுக்கான திருவிவிலியம் 190-க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதுடன், உலகளவில் 5 கோடியே 10 இலட்சத்திற்கும் அதிகமான பிரதிகள் அச்சிடப்பட்டுள்ளன என்பது மிகவும் குறிப்பிடத்தக்கது.

செல்வராஜ் சூசைமாணிக்கம் - வத்திக்கான்

# திருத்தந்தை பதினான்காம் லியோவை இந்திய நாட்டிற்கு வருகை தருமாறு அழைப்பு

வத்திக்கானில் நடந்த ஒரு கூட்டத்தில், CBCI தலைவரான திருச்வர் பேராயர் ஆண்ட்ரூஸ் தாழத், இந்தியாவுக்கு வருகை தருமாறு திருத்தந்தையிடம் அழைப்புக் கடிதத்தை வழங்கினார்.

"இந்திய மக்கள் - அனைத்து சடங்குகள் மற்றும் பிராந்தியங்களைக் கடந்து - திருத்தந்தை லியோ XIV இன் வருகையை ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள். அவரது இருப்பு நமது விசுவாசிகளுக்கு ஒரு ஆழமான ஆசீர்வாதமாகவும், நமது பன்முகத்தன்மை கொண்ட தேசத்தில் நம்பிக்கை, அமைதி மற்றும் ஒற்றுமையின் வலுவான அடையாளமாகவும் இருக்கும்" என்று பேராயர் கூறினார்.

அமெரிக்காவில் பிறந்த முதல் திருத்தந்தை லியோ XIV, துணைக்கண்டத்திற்கு வருகை தர வேண்டும் என்பது மில்லியன் கணக்கான இந்தியர்களின் விருப்பமாகும் என்றும் இந்தியாவில் 20 மில்லியனுக்கும் அதிகமான கத்தோலிக்கர்கள் வசிக்கின்றனர்.

வத்திக்கான் இன்னும் அதிகாரப்பூர்வமாக பதிலளிக்கவில்லை, ஆனால் கத்தோலிக்க திருச்சபையில் உள்ளவர்கள் அழைப்பைப் பெற்றதற்கு நன்றியுடனும் மகிழ்ச்சியுடனும் இருப்பதாகக் கூறுகிறார்கள். இந்தப் பயணம் நடந்தால், அது திருத்தந்தை லியோ XIV தலைமையிலான இந்திய திருச்சபைக்கும் ஹோலி சீக்கும் இடையிலான உறவில் ஒரு புதிய அத்தியாயத்தைக் குறிக்கும்.

இந்தியாவிற்கு வருகை தந்த முதல் திருத்தந்தை பால் IV ஆவார், அவர் 1964 இல் மும்பைக்கு திருப்பயணம் செய்தார். திருத்தந்தை ஜான் பால் II பிப்ரவரி 1986 மற்றும் நவம்பர் 1999 இல் இந்தியாவிற்கு திருப்பயணம் செய்தார். இந்தியாவிற்கு வருகை தந்த கடைசி திருத்தந்தை ஜான் பால் II, ஆசியாவில் உள்ள திருச்சபை பற்றிய ஆவணத்தை வெளியிடுவதற்காக 1999 இல் புது தில்லிக்குச் சென்றார்.

திருத்தந்தை பிரான்சிஸ் இந்தியாவுக்கு வருகை தரும் தனது விருப்பத்தை பலமுறை வெளிப்படுத்தினார், ஆனால் இந்திய மத்திய அரசு அதிகாரப்பூர்வ அழைப்புக் கடிதத்தை சரியான நேரத்தில் வழங்கத் தவறியதால் அது நடக்கவில்லை. இந்தப் பயணம் 2017 இல் நடக்கவிருந்தது, ஆனால் அது நிறைவேறவில்லை.

# ஆவியில் அருள்வாழ்வுப் பயிற்சி






புகழ் ஆராதனையை வழிநடத்தும் அடிப்படை வழிமுறைகள், விவிலிய அடிப்படையிலான ஜெபவழிமுறை, அருங்கொடை ஆராதனை பணியின் வளர்ச்சி, செயல்திறன், இதுபோன்ற ஜெபக்குழுக்களை எவ்வாறு நன்கு நடத்தலாம் என்பதை தெளிவாக புரிந்துகொள்ளும் வகையில் ஒரு சிறப்பான உருவாக்கப்பயிற்சி, அருங்கொடை மறுமலர்ச்சி ஜெபகுழு உறுப்னர்கள் ஏற்பாட்டில் கடந்த சனிக்கிழமை மே மூன்றாம் நாள், காலை 9 முதல் மதியம் 1 மணிவரை வெற்றிகரமாக, மஜோடி மறைமாவட்டத்தில் கிறிஸ்து ராஜா தேவலாயத்தில் நடைபெற்றது. இப்பயிற்சியில் 16 இளைஞர்கள், 6 பெரியோர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். இந்நிகழ்ச்சி பங்கு குருவானர், அருட்பணியாளர் ஜேம்ஸ் ராஜேந்திரன் (Rev Fr.JR) அனுமதியுடனும் தேவாலய சமுகத்தினரின் ஆதரவுடனும் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியின் துவக்கத்தில் திருத்தொண்டர் அருமை தாஸ் உரையாற்றினார். அவர், கத்தோலிக்க அருங்கொடை பாடல் துறை, வழிபாட்டின் ஆவிக்குரிய அடித்தளங்கள் ஆகியவற்றைத் தெளிவாகப் பகிர்ந்தார். பின்னர், சகோதரர் சுரேஷ் நடைமுறையில் பயன்படுத்தக்கூடிய வகையிலும் சிறப்பான ஜெப அனுபவத்தை வழங்கப் பயன்படுத்தக்கூடிய நுணுக்கங்களையும் எளிய முறையில் பகிர்ந்தார். நிகழ்ச்சி திட்டமிட்டப்படி நடைபெற்றது. இதில் கற்பித்தல், குழுப் பகிர்வு, ஆவிக்குரிய சிந்தனைகள் மற்றும் வாழ்த்துப் பாடல்கள் ஆகியவைகள் இடம்பெற்றன. பங்கேற்ற அனைவரும் ஆர்வத்துடன் காணப்பட்டனர்.

அருட்பணியாளர் ஜோ மேத்யூ (Rev.Fr.Joe Matthews) நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அனைவரையும் ஊக்குவித்தார். இத்தகைய உருவாக்கப் பயிற்சிகள் தேவாலயத்தில் ஆன்மீக வளர்ச்சிக்கு மிகவும் அவசியம் என்பதை வலியுறுத்தினார். பங்கேற்ற சிலர் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்துக்கொண்டனர். ஒருவர், "பாடல்துறையில் தன்னம்பிக்கையுடன் பணியாற்றும் திறமையை இந்தப் பயிற்சி தந்தது," என்று சாட்சி பகர்ந்தார். மற்றொருவர், "புகழ்ச்சி மற்றும் வழிபாட்டின் ஆழமான நோக்கத்தை இப்போது நன்கு புரிந்துகொண்டேன்," என்றார்.

இந்நிகழ்ச்சி ஆன்மீக ஊக்கத்துடனும் புதிய நோக்கத்துடனும் முடிவடைந்ததாக ஏற்பாடுக் குழுவினர் தெரிவித்தனர். பங்கேற்றவர்கள் தங்கள் ஆவிக்குரிய சேவையில் தொடர்ந்து உறுதியுடன் செயல்படப்போவதாக நம்பிக்கைத் தெரிவித்தனர்.

# பினாங்கு மறைமாவட்ட தமிழ்க் கத்தோலிக்க அருங்கொடை மறுமலர்ச்சியின் 40 ஆம் ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம்







பெர்மாத்தாங் திங்கி.

பினாங்கு மறைமாவட்டத்தில் தமிழ்க் கத்தோலிக்க அருங்கொடை மறுமலர்ச்சி தொடங்கப்பட்டு, 40 ஆண்டுகள் நிறைவைக் கொண்டாடும் வகையில் பெர்மாத்தாங் திங்கி புனித மரியாளின் தூயப் பெயர் ஆலயத்தில், "நம்பிக்கை ஒருபோதும் ஏமாற்றம் தராது" (உரோமையர் 5:5) என்றக் கருப்பொருளில், தமிழ்க் கத்தோலிக்க அருங்கொடை மறுமலர்ச்சி எழுச்சிக்கூட்டம் நடைப்பெற்றது. இந்நிகழ்வில் 1000க்கும் மேற்பட்ட விசுவாசிகள் எழுச்சியுடன் கலந்து கொண்டு இறை ஊக்கம் பெற்றனர் என ஏற்பாடுக்குழுவின் ஒருங்கிணைப்புத் தலைவர் ஜேசுதாஸ் குறிப்பிட்டார்.

கடந்த 12-ஆம் தேதி காலை எட்டு முப்பது மணி முதல் மாலை மணி ஆறு வரை நடைப்பெற்ற இக்கொண்டாடத்தில் ஜெப ஆராதனை, மறையுரை, நற்கருணை ஆராதனை, திருப்பலி ஆகியவைகள் இடம்பெற்றிருந்தன. பினாங்கு மறைமாவட்டத்தை ஒட்டியுள்ள எல்லாப் பங்குகளில் இருந்தும் விசுவாசிகள் எழுச்சியுடன் கலந்துக்கொண்டதாக ஜேசுதாஸ் கூறினார்.

தூய ஆவியானவருக்கு நன்றி கூறிப் புகழ் ஆராதனையோடும் தொடக்க ஜெபத்தோடும் இக்கொண்டாட்டம் தொடங்கியது. தூய ஆவியானவரோடு இந்த 40 ஆண்டுகாலப் பயணத்தில் மறைமாவட்டத்தில் உள்ள பல பங்குகளில் ஜெபக்குழுக்களை உருவாக்கி செயல்பட்டு வந்துள்ளதை தொடக்க ஜெபத்தில் நினைவுக்கூறப்பட்டது. காலை ஒன்பது மணி அளவில் 40 ஆம் ஆண்டு விழாவைக் கொண்டாடும் வகையில் தயார் செய்யப்பட்ட தமிழ்க் கத்தோலிக்க அருங்கொடை ஜெபக் குழுவின் வரலாற்று செய்தி புத்தகம், பங்குத்தந்தை அருட்பணியாளர் லூயிஸ் லோய் தலைமையில் வெளியிடப்பட்டது. இந்த புத்தகத்தில் 40 ஆண்டு காலம் பினாங்கு மறை மாவட்டத்தில் தமிழ்க் கத்தோலிக்க அருங்கொடை மறுமலர்ச்சியின் வரலாறும், இக்குழுவின் வளர்ச்சிக் குறித்த செய்திகளும் படங்களும் இடம் பெற்றிருந்தன.

இதன் பின் தொடங்கிய ஜெப ஆராதனைக்குப் பின்னர், தமிழகத்தைச் சேர்ந்த அருட் தந்தையர்கள் டேனியல் ராஜ் VC, வில்லியம் போஸ்கோ VC இருவரும் மாலை வரை, னய ஆவியானவரைக் குறித்தும், னய ஆவியானவரின் செயல்பாடுகள் குறித்தும் மறைவுரை ஆற்றினர். இவர்களிடையே, இளைஞர்கள் தனி குழுவாகப் பிரிக்கப்பட்டு, அவர்களுக்காகவும் சிறப்பு மறையுரை நிகழ்த்தப்பட்டது.

பிற்பகல் 3 மணி அளவில் துவங்கிய நற்கருணை ஆராதனையில் குருவானவர்களோடு சேர்ந்து விசுவாசிகளும் உற்சாகத்தோடு ஈடுபட்டனர். இந்த ஆராதனையின் போது நடைபெற்ற புதுமைகள் குறித்து, குருவானவர் நன்கு விவரித்தார். பின்னர் தொடங்கியத் திருப்பலி கொண்டாட்டம் கூடி வந்த விசுவாசிகள் மத்தியில் புது எழுச்சியைத் தூண்டியதோடு, தூய ஆவியில் விசுவாசத்தைப் புதுப்பிக்க உதவியது.

தமிழகத்திலிருந்து சிறப்பு வருகை புரிந்த அருட்பணியாளர்கள் டேனியல் ராஜ் VC, வில்லியம் போஸ்கோ VC ஆகிய இருவருக்கும் அருங்கொடை இயக்கப் பங்கு ஜெபக்குழுக்களின் ஒருங்கிணைப்பாளர் செபஸ்தியன் பிள்ளை நன்றிதனை தெரிவித்தார்.

# மண்ணக முகத்தைப் புதுப்பிப்பவர், தூய ஆவியானவர்



இன்று பெந்தகோஸ்து திருவிழாவைக் கொண்டாடுகிறோம். இந்த விழாவின் உள்ளுணர்வை அறிந்துக் கொள்ள வேண்டுமென்றால், மேல்மாடி அறைக்குச் செல்லும் அனுபவத்தைப் பெற வேண்டும் (லூக்.22:12). திருத்தூதர்கள் அச்சமும் கலக்கமும் பதபதைப்பும் நிறைந்த நிலையில் அந்த அறையில் ஒளிந்து கொண்டிருந்தார்கள். வெளியுலகத்தின் அச்சுறுத்தலுக்கும் சித்ரவதைக்கும் அஞ்சியிருந்தனர். அடுத்து என்ன நடக்குமோ, என்ன செய்யப் போகிறோமோ என்பது புரியாமல் திக்கற்றவர்களாய் இருந்தனர். இருப்பினும் ஆண்டவர் இயேசு கிறிஸ்து சொன்ன வார்த்தையை நம்பி, அவர்கள் ஒன்றாய்க் காத்திருந்தார்கள். “நீங்கள் எருசலேமை விட்டு நீங்க வேண்டாம். என்னிடமிருந்து கேட்டறிந்த தந்தையின் வாக்குறுதி நிறைவேறக் காத்திருங்கள்” (திப.1:4). இது கிபி33ஆம் ஆண்டு நடந்தது.

1947ஆம் ஆண்டு இந்தியா பிரிட்டிஷ்மிடமிருந்து விடுதலை பெற்றப் போது, இந்துகளுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையே கலவரம் ஏற்பட்டது. வெளியுலகத் தொடர்பில்லாத கன்னியர் மடத்தில் (cloistered order) அன்னை தெரேசா பணியாற்றினார். குற்றுயிராய்க் குலையுயிராய் தெருவில் கிடந்த மக்களைக் காப்பாற்ற மடத்தை விட்டுவெளியேறி, திக்குத் தெரியாமல் தனிந்தனியாய் போராடினார். அவர் உருவாக்கியச் சபையில் இன்று ஆயிரக்கணக்கான கன்னியர்கள் பணிபுரிகிறார்கள்.

முதலாம் நூற்றாண்டில் திருத்தூதர்களுக்கும் 20ம் நூற்றாண்டில் அன்னை தெரேசாவுக்கும் வெளியுலகத்தை எதிர்கொள்ள துணிவும் தெம்பும் திராணியும் தந்து, முன்னெடுக்க வைத்தது தூய ஆவியானவர். இன்று அதே ஆவியானவர் திருஅவையின் வழி முன்னெடுக்க நமக்குத் துணையாய் இருக்கிறார். “ஒப்புரவு ஒழுகு” என்ற ஔவையார் கூறிய வார்த்தைக்கேற்ப, திருஅவையோடு தொண்டாற்றும் வழிமுறைகள் பல உள்ளன. அதற்கு நம்மை ஆட்கொண்டு வழிநடத்தும் தூய ஆவியாரோடு முதலில் ஒப்புரவு கொள்ள வேண்டும். “தந்தையிடமிருந்து நான் உங்களுக்கு அனுப்பப் போகிற துணையாளர் வருவார். அவரே உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார்” (யோவா.15:26;14:17). உண்மைக்கு வழிநடத்திச் செல்லும் தூய ஆவியானவரைப் பெற வேண்டும் என்றால், இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டு, எருசலேமிலேயே காத்திருந்த திருத்தூதர்களைப் போல் அவரது போதனையைக் கடைப்பிடிக்க வேண்டும் (யோவா.14:23) என இன்றைய நற்செய்தி கூறுகிறது. ஆண்டவரது வார்த்தை மீது பசிதாகம் கொண்டுச், செபிக்க வேண்டும்.

தூய ஆவியானவர் “உங்களோடு தங்கியிருக்கிறார்” (யோவா.14.17) என்றால், நாம் அவரது ஆலயமாக உருமாற வேண்டும் (1கொரி.6:19). இன்றைய இரண்டாம் வாசகம் கூறுவது போல் வாழ முற்பட வேண்டும். “ஊனியல்புக்கு ஏற்ப வாழ்வோர் கடவுளுக்கு உகந்தவர்களாய் இருக்க முடியாது” (உரோ.8:8). செபவாழ்வில் ஈடுபாடு கொள்ள வேண்டும். “தூய ஆவியார் தாமே சொல்வடிவம் பெற முடியாத நம்முடைய பெருமூச்சுக்களின் வாயிலாய் நமக்காகப் பரிந்து பேசுகிறார்” (உரோ.8:26). “அப்பா, தந்தையே” என அழைக்கும் போது கடவுளின் பிள்ளைகள் என்பதற்கு தூய ஆவியானவர் சான்று பகர்கிறார் (உரோ.8:15).

பெந்தக்கோஸ்து ஒரு கடந்த கால நிகழ்வு அல்ல; அது என்றுமுள நிகழ்வு. இன்றும் மேல்மாடி அறையில் (ஆலயம்) எல்லாப் புனிதர்களோடும் (திருத்தூதர்கள்) அன்னை மரியாளோடும் ஒவ்வொரு திருப்பலியிலும் இணைந்து மன்றாடுகிறோம். தூய ஆவியானவர் எல்லாக் காலத்திலும் திருஅவையில் செயல்பட்டு வருகிறார். புதியத் திருத்தந்தை 14ஆம் லியோ(சிங்கராயர்) இரண்டே நாளில் தேர்வு செய்யப்பட்டார், இதற்கு ஓர் எடுத்துக்காட்டு. உமது ஆவியை அனுப்பும் ஆண்டவரே; மண்ணகத்தின் முகத்தைப் புதுப்பிக்கின்றீர் (திப.104:30)

அந்தோணி இன்னாசி
சைபர்ஜெயா